கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 355, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

355—

பகுதிநேர நியாய விலைக் கடை

***14387—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, வெள்ளிமலை மற்றும் குருவார்பட்டி மலைக் கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மேலூர் தொகுதி, பள்ளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் பொட்டப்பட்டி முழுநேரக் கடை 355 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பொட்டப்பட்டி முழுநேர நியாய விலைக் கடையில் லக்கடிப்பட்டி மற்றும் வெள்ளிமலை கிராமத்தை உள்ளடக்கிய குருவார்பட்டி ஆகிய இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே செயல்பட்டு வரும் நிலையில், அரசு விதிகளின்படி மேலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை வெள்ளிமலை கிராமத்தில் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியப் பகுதியில்*

2013 ஏப்ரல் 30]

வெள்ளிமலை கிராமம் உள்ளது. அந்தப் பகுதியிலே குடியிருக்கின்ற மக்கள் முழுமையாக நகர்ப்புறத்தைப் பார்த்ததே கிடையாது. இங்கே இருக்கின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்குள்ளவர்கள் நகர்ப் பகுதிக்கு வரமாட்டார்கள். அந்த மலைப் பகுதியிலேயே குடியிருந்து வருகிறார்கள்; விவசாயம் செய்து வருகிறார்கள்; அங்கே விளைகின்ற காய்கறிகளை வைத்துச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, அங்கேயே குடியிருந்து வருகிறார்கள். அந்த வெள்ளிமலைப் பகுதியில் கிட்டத்தட்ட 170 ரேஷன் கார்டுகள் இருக்கின்றன. வெள்ளிமலை என்பது குருவார்பட்டியிலிருந்து 2 கி.மீ. தொலைவிலே இருக்கின்றது. அதைச் சுற்றிக் குடியிருப்பவர்கள் 1 கிலோ மீட்டர், அரை கிலோ மீட்டர் தொலைவிலே மலைமீது குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் குருவார்பட்டி கிராமத்திற்கு வந்து ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிப் பக்கம் எப்போது போனாலும், ‘எங்களுக்குக் குடிதண்ணீர் வேண்டும்; ரோடு வேண்டும்; முதியோர் உதவித் தொகை வேண்டும்’ என்றுதான் பொது மக்கள் கேட்பார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, எதையுமே மக்கள் இப்போது நம்மிடம் கேட்பதே கிடையாது. அதற்குக் காரணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் திட்டங்களும் கிராம மக்களைச் சென்றடையும் வகையில், அரசுத் துறை அதிகாரிகளை கிராமங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். முதியோர் உதவித் தொகை வழங்குவதிலிருந்து சாலை வசதி செய்து தருதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை, அம்மா திட்டம், தாய்த் திட்டம் போன்ற நல்ல திட்டங்களை அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 100 சதவிகிதம் தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் எல்லாத் துறைகளின் மூலமாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து கொண்டு வருகின்றது. இப்போது அங்கும் இங்குமாக எங்கேயாவது சட்டமன்ற உறுப்பினர்கள் போகின்றபோது, பகுதிநேர நியாய விலைக் கடையைத் தொடங்க வேண்டுமென்ற ஒரேயொரு சின்ன கோரிக்கையைத்தான் மக்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின்

சார்பாகவும் இதை சட்டமன்றத்தில் நான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து, எனக்கு நன்றாகத் தெரியும். இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளைப் பிரித்த பின்னர், தாய்க் கடையிலிருந்து மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடையைப் பிரிக்க முடியாது என்கிற விதி அரசாங்கத்திலே இருப்பது எனக்குத் தெரியும். அந்த விதி குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் சொல்லி, அந்த விதியை மாற்றி, இதுபோன்ற மலைப் பகுதிகளில், காட்டுப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகள் பயனடையும் வகையில் சிறப்பு நேர்வாக இந்தக் கடைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கும் சேர்த்து, உங்களுடைய பகுதியிலேயும் இதுபோன்ற கடைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்களைப் பொறுத்தவரையில், அவர் அந்தப் பகுதியில் செல்வாக்கானவர். இது அனைவருக்கும் தெரியும். இன்றைக்கு அவர் சொன்னதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே சேர்ந்து மேசையைத் தட்டுகிறீர்கள். அந்த அளவிற்கு, பொதுவாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பிறகு, இந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 450 முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன; 795 பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்களுடைய தொகுதியில், இரண்டே ஆண்டுகளில் 3 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 7 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. பள்ளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்ட இந்த நியாயவிலைக் கடை ஏற்கெனவே 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் அளவில் cumulative loss-ல் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு 25 இலட்சம்

2013 ஏப்ரல் 30]

ரூபாய் இலாபம் வந்தது. இந்த ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டு, உத்தேசமாக 21.8 இலட்சம் ரூபாய் இலாபம் வரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, இப்பொழுதுதான் நஷ்டம் 1½ கோடியிலிருந்து, படிப்படியாகக் குறைந்து கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், இந்தக் கடையைப் பொறுத்தளவில், 120 கார்டுகள் மட்டுமே உள்ளன. 2 கி.மீ. தூரத்தில் 2 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கடையும் இரண்டு நாட்கள், இரண்டு நாட்கள் எனத் திறக்கப்படுகின்றன. வாரத்திற்கு 2 நாட்கள்தான் என ஒரு கடை திறக்கப்படும்போது நுகர்வோர்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது. பொட்டப்பட்டி கிராமத்திலுள்ள முழுநேர நியாயவிலைக் கடை திங்கள், வியாழன் ஆகிய இரண்டு நாட்கள் திறக்கப்படுகின்றன; 1 சேல்ஸ்மேன் மட்டுமே பணியாற்றுகிறார். குருவார்பட்டி பகுதிநேர நியாயவிலைக் கடை செவ்வாய், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களும், லக்கடிப்பட்டி கடை புதன், சனி ஆகிய இரண்டு நாட்கள் என 6 நாட்களில், ஒவ்வொரு கடையும் இரண்டிரண்டு நாட்கள் எனத் திறக்கப்படுகின்றன. இன்னொரு பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்படும்போது அது முழுநேர நியாய விலைக் கடையாகத் திறக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, இது மலைக் கிராமம் அல்ல. மலையடிவாரத்தில் இருக்கிறது. இரண்டு கி.மீ. தூரத்தில் இன்னொரு கடை இருக்கிறது. அங்கிருந்து வருகிறவர்கள் இதுவரை எந்தவிதத் தடங்கலுமின்றி பொருட்களை வாங்கிச் செல்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்கள் இன்னொரு கடை திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதை முழுநேர நியாயவிலைக் கடையாக எப்படி மாற்றுவது அல்லது இந்தக் கடையை இன்னொரு பகுதிநேர நியாயவிலைக் கடையாக மாற்றுவதற்கு என்ன வழி செய்யலாம் என்பதுபற்றித் துறைரீதியாக ஆய்வுசெய்து, அதிவிரைவில் அதற்கான பணிகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

[2013 ஏப்ரல் 30

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்க் கடையிலிருந்து பிரித்து, இரண்டு பகுதிநேரக் கடைகள் துவங்கப்பட்டுள்ளன என்பதை நான் ஏற்கெனவே கூறிவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாய்க் கடையிலிருந்து மூன்றாவது பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க இயலாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அங்குள்ள மக்கள் மலைப் பகுதியில் குடியிருக்கிறார்கள்; அவர்கள் மலைக்குக் கீழே குடியிருக்கவில்லை. மலைக்குக்கீழேயும் 10, 20 குடும்பங்கள் வசிக்கின்றன. மலைக்கு மேலேயும் 100, 150 குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்கள் கீழே இறங்கி பொருட்களை வாங்குவதற்கு வரும்போது, அந்தக் கடைகளில் பொருட்கள் வாங்க முடிவதில்லை. ஏற்கெனவே குருவார்பட்டி கடையில் இரண்டு நாட்கள் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றார். அந்த இரண்டு நாட்களில், 1 நாளில் குருவார்பட்டி கடையிலும், இன்னொரு நாள் தாய்க் கடையிலிருந்து பிரித்து, மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்து அங்கு பொருட்கள் விநியோகம் செய்தால் அந்த மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். பகுதிநேரக் கடையைப் பிரித்து அமைப்பதை பொறுத்தளவில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து, இதனை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசாணையை மாற்றி, அந்த மலைப் பகுதிக்கு மூன்றாவது பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை எவ்வாறு பரிசீலிக்கலாம் என்பதை துறை அதிகாரிகளிடம் கலந்துபேசி, பரிசீலித்து, முடிவு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.